**செய்தி வெளியீடு எண்:014** **நாள் :12.01.2015**

## <u>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்</u>

## <u>பத்திரிக்கை செய்தி</u>

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் படி இன்று **(12.01.2015)** தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய கலையரங்கில் வைத்து போகிப்பண்டிகையின் போது ஏற்படும் காற்று மாசினை குறித்த விழிப்புணர்வு பிரச்சார துவக்க விழா நடைபெற்றது . இவ்விழாவில் **மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்** அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றி போகி பண்டிகையின் போது ஏற்படும் மாசு குறித்த விழிப்புணர்வு பிரசார வாகனங்களை கொடி அசைத்து துவக்கி வைத்து கீழ்கண்டவாறு உரையாற்றினார்கள்.

இன்றைய நாகரீக உலகில் சுற்றுச்சூழல் மாசு தொழிற்சாலைகளால் மட்டும் ஏற்படுவதில்லை. மக்கட்தொகை பெருக்கம், வாகனப்புகை, குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், நகரத் திடக் கழிவுகள் எரிப்பது போன்றவற்றால் சுற்றுச்சூழல் மாசுபட்டு வருகின்றது. இவ்வகையான மாசு இயற்கையே சீர்செய்து கொள்ளும் அளவினை தாண்டி ஏற்படுவதால், பலவிதமான சுற்றுச்சூழல் பிரச்சனைகளை நாம் அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதில் மக்களின் பழக்கவழக்கத்தினால் ஏற்படும் காற்று மாசும் ஒன்றாகும். போகி மற்றும் தீபாவளி பண்டிகையால் ஏற்படும் காற்று மாசு மற்றும் ஒலி மாசு குறிப்பிடத்தக்கதாகும்.

நமது முன்னோர்கள் பொங்கல் திருநாளுக்கு முன் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகி பண்டிகையினை கொண்டாடி வந்துள்ளனர். நமது வீடுகளில் சேகரம் ஆகும் இயற்கை பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டு கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் ஏற்பட்ட காற்று மாசுபாடு இயற்கையால் உட்கிரகிக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்துள்ளது.

தற்பொழுது போகி பண்டிகையின் பொழுது பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், ரப்பர் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப், காகிதம், இரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் காற்று மாசு ஏற்படுவதோடு போகி அன்று எரிக்கப்படும் பொருட்களால் ஏற்படும் அடர்ந்த புகையின் காரணமாக விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது. சென்னை நகரில் போகி அன்று எரிக்கப்படும் மேற்படி பொருட்களால் புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதோடு விபத்துகளுக்கும் காரணமாக உள்ளது. பழைய பிளாஸ்டிக் பொருட்கள், டயர் மற்றும் டியூப் போன்றவற்றை எரிப்பதால் வெளிப்படும் நச்சு வாயுக்களால் மூச்சு திணறல், கண் எரிச்சல் போன்ற நோய்கள் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

இத்தகைய செயல்கள் பொது மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமையால் ஏற்பட்டு வந்தது. இதனை தவிர்க்க, **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் படி இயங்கிவரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 10 ஆண்டுகளாக போகிபண்டிகைக்கு முன் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், காவல்துறை, தீயணைப்பு துறை மற்றும் சென்னை மாநகராட்சியின் உதவியுடன் விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த 4–5 வருடங்களாக பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ரப்பர் டயர், டியூப் போன்றவை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது. இதை மேன்மேலும் தீவிரப்படுத்தி தமிழகத்தில் சுற்றுச்சூழல் மாசு படாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி, ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் போகி பண்டிகைக்கு இரு தினங்களுக்கு முன் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டு சென்னை நகர மக்களிடையே பழைய பொருட்கள் எரிக்கப்படுவதால் ஏற்படும் தீமைகள், சுற்றுச்சூழல் பாதிப்புகள் போன்றவற்றை எடுத்து கூறிவருகின்றது. இதோடு போகி பண்டிகைக்கு முன் இரவு முழுவதும் பலகுழுக்களாக பிரிந்து சென்னை நகரை வலம் வந்து வீடுகளுக்கு முன் பழைய பொருட்கள் எரிக்கப்படுவதை **மாண்புமிகு மபுரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் படி இயங்கிவரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தடுத்து வந்துள்ளது.

இந்த வருடமும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் போகிப் பண்டிகையின்போது பழைய பொருட்கள், டயர், டியூப், பிளாஸ்டிக் பொருட்கள் எரிப்பதை தவிர்க்கவும், விழிப்புணர்வினை ஏற்படுத்துவது குறித்த துவக்க விழா இன்று நடைபெற்றது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் சுற்றுச்சூழல் துறை சார்பாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் முனைவர் கே. கார்த்திகேயன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரிய தலைவர் திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் முதன்மை செயலர், திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., மாநில சுற்றுச்சூழல் துறை தாக்க மதிப்பீட்டு ஆணைய தலைவர் திரு. வி. தங்கவேலு, இ.ஆ.ப., (ஓய்வு) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். **மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்** அவர்கள் விழாப் பேருரை ஆற்றி போகி பண்டிகையின் போது ஏற்படும் மாசு குறித்த விழிப்புணர்வு பிரசார வாகனங்களை கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் போகிப் பண்டிகையின்போது கடைபிடிக்க வேண்டிய உறுதிமொழியினை வாசிக்க மாணவ மாணவிகள், பொதுமக்கள், அலுவலர்கள் அனைவரும் உறுதிமொழி ஏற்றனர். மேலும், பள்ளி மாணவ, மாணவியரிடம் போகி பண்டிகையின்போது பழைய பிளாஸ்டிக் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப் பொருட்களை எரிக்க வேண்டாம் என்றும் **மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்** அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

சுற்றுச்சூழல் துறை இயக்குநர் முனைவர் எச். மல்லேசப்பா, இ.வ.ப., அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வாரிய அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் துறை அதிகாரிகளும், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**